*செய்தி வெளியீடு எண்:27* *நாள்: 16.09.2019.*

**தேனி மாவட்டம்**
**தேனி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில், நடப்பாண்டில் விற்பனை குறியீடாக ரூ.100.00 இலட்சங்கள் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது -**

**நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் (கோ-ஆப்டெக்ஸ்) சிறப்பு தள்ளுபடி விற்பனையை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, தகவல்:-**

*தேனி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் சார்பில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் (கோ-ஆப்டெக்ஸ்) சிறப்பு தள்ளுபடி விற்பனையை இன்று (16.09.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.*

*விற்பனையை துவக்கி வைத்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,*

*கோ-ஆப்டெக்ஸ் என அனைவராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம், 1935-ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு தொடர்ந்து 84 ஆண்டுகளாக தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் சிறப்பான முறையில் சேவை புரிந்து வருகிறது. இந்தியாவிலுள்ள கைத்தறி நிறுவனங்களிலேயே முதன்மை நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் திகழ்வதற்கு நெசவாளர்களின் ஒத்துழைப்பும், வாடிக்கையாளர்களின் பேராதரவும் தான் முக்கியம்.*

*கைத்தறி ரகங்களின் விற்பனையை அதிகரிக்க தமிழக அரசு ஆண்டுதோறும் பண்டிகை காலங்களில் 30 சதவீதம் சிறப்பு தள்ளுபடியினை வழங்கி வருகிறது. அதனடிப்படையில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பட்டு, பருத்தி கைத்தறி ரகங்களுக்கு 30 சதவீத சிறப்புத்தள்ளுபடி வழங்கப்படுகிறது. பண்டிகையை முன்னிட்டு பல வண்ணங்களில் பருத்தி, மென் பட்டு சேலைகள், பருத்தி சேலைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் மற்றும் நவீன காலத்திற்கு உகந்த இரகங்கள் தீபாவளி பண்டிகைக்காக தருவிக்கப்பட்டுளளது.*

*தற்போது உடல்நலத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் ஏற்ப இரசாயன உரங்கள் இல்லாமல், இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட பருத்தியைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட இயற்கை சாயமிட்ட ஆர்கானிக் புடவை இரகங்கள் விற்பனைக்கு உள்ளது. மேலும், பரம்பரிய ரகங்களை புதுப்பிக்கும் விதமாக செட்டிநாடு சேலைகள், கைத்தறி சுங்கடி சேலைகள், டிசைனர் காட்டன் சேலைகள், மதுரை, தஞ்சாவூர் ஸ்லப் காட்டன் சேலைகள், ஈரோடு காதா டிசைனர் போர்வைகள், பருத்தி மற்றும் பட்டு பரமக்குடி 100 புட்டாச் சேலைகள் பண்டிகைக்காக தருவிக்கப்பட்டுள்ளன. மேலும், நவீன யுக ஆடவர்களை கவரும் விதமாக லினன் / பருத்தி (Linen/Cotton) சட்டைகள் கண்ணைக் கவரும் வண்ணங்களில் வாடிக்கையாளர்களுக்காக தருவிக்கப்பட்டுள்ளது.*

*கோ-ஆப்டெக்ஸ்ஸின் ஜவுளி ரகங்களை மின் வணிக வலைதளமான* www.cooptex.com *என்ற இணையதளத்தின் மூலமும் பெற்றுக்கொள்ளலாம். தேனி விற்பனை நிலையத்தில் கடந்த ஆண்டு தீபாவளி விற்பனை ரூ.82.53 இலட்சங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் விற்பனை குறியீடாக ரூ.100.00 இலட்சங்கள் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, நமது மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் நெசவாளர்களின் நலன் கருதியும், மேலும், தள்ளுபடி வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு தெரிவித்தார்.*

*இந்நிகழ்வின் போது, கோ-ஆப்டெக்ஸ் மதுரை மண்டல மேலாளர் ஜெ.நாகராஜன், அரசுத்திட்ட மேலாளர் எஸ்.பாடலிங்கம், கிளை மேலாளர் (பொ) கே.கார்த்திக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***